JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC.271/2014
PW.1

| பெயர் | பாலமுருகன் | தாலுகா | செங்கோட்டை |
|---|---|---|---|
| தந்தை பெயர் | பரமசிவன் | தொழில் | தனியார் கம்பெனி |
| கிராமம் | பண்பொழி | வயது | 32 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது பண்பொழியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சாட்சிகள் சரவணன், மகேஷ் ஆகியோர்களை தெரியாது. வழக்கில் இறந்து போன சரவண குமார் என் பெரியப்பா மகன். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 12 வருடங்களுக்கு முன்பு சரவணக்குமாருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சம்பவத்தை கேள்விபட்டு கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அவர் இறந்து விட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு நினைவில் இல்லை. காவல்நிலையத்தில் போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன். மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 19.08.2013 ம் தேதியன்று 18.30 மணியளவில் வழக்கில் இறந்து போன சரவணக்குமார் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் பட்டியல் சாட்சி மகேஷ் என்பவருடன் சென்று

கொண்டிருந்த போது ஆஜர் எதிரி தன்னுடைய லாரியை வடக்கிருந்து தெற்காக தென்காசி முதல் மதுரை ரோட்டில் கிருஷ்ணாபுரம் ஊருக்கு வடக்கே அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அதில் சரவணக்குமார்இறந்து விட்டார் என்றாலும் சாட்சி மகேஷிற்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலைம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi